# யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2017

### குடியுரிமைக்கல்வி

| சுட்டெண் :............................ | தரம் : 7 | நேரம் : 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

1. சமூகத்தின் சிறிய அலகு
(1) பாடசாலை (2) கோயில் (3) குடும்பம் (4) சனசமூகநிலையம்

2. கருக்குடும்பத்தின் இயல்புகளில் ஒன்று
(1) பாட்டன், பாட்டி காணப்படுவர்
(2) சுயாதீன தன்மையுடையது
(3) உதவிக்கு ஏனையோரின் தங்கியிருத்தல்
(4) குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம்

3. ஒரு குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டியவர்கள்
(1) தாயும் தந்தையும் (2) குடும்ப உறுப்பினர் அனைவரும்
(3) அக்காவும் அண்ணாவும் (4) பாட்டனும் பாட்டியும்

4. குடும்பமாக வாழும்போது கிடைக்கும் நன்மையாக அமையாதது
(1) பாதுகாப்பு (2) கல்வியைப் பெற்றுக் கொள்ளல்
(3) அன்பு, அரவணைப்பு (4) பிறர் கருத்துக்களை மதிக்காமை

5. இன்று சமூகத்தில் அதிகளவு காணப்படும் குடும்ப முறை
(1) கருக்குடும்பம் (2) விரிந்த குடும்பம் (3) அயற்குடும்பம் (4) கூட்டுக்குடும்பம்

6. ஆரோக்கியமான குடும்பமொன்றில் காணப்படும் பிரதான பண்பு
(1) போதியளவு பணம் இருத்தல்
(2) குடும்ப உறுப்பினர்களின் தேவை நிறைவேற்றப்படல்
(3) எல்லோரும் பிரச்சினைகளற்று காணப்படுவர்
(4) சமூகத்தில் உயர் பதவி வகித்தல்

7. அறிவு, திறன், ஆற்றல்களை விருத்தி செய்ய உதவும் இடம்
(1) பாடசாலை (2) நூலகம்
(3) மதவழிபாட்டு தலங்கள் (4) மேற்கூறிய அனைத்தும்

8. விளையாட்டில் ஈடுபடுவதனால் ஒருவரிடத்தில் விருத்தியடையும் பண்பு
(1) ஆக்கத்திறன்
(2) இரசனை உணர்வை வெளிப்படுத்தாமை
(3) வெற்றி தோல்வியை சமமாக கருதுதல்
(4) ஒற்றுமையின்மை

9. அழகியற் செயற்பாடாக அமையாதது எது
(1) சித்திரம் வரைதல் (2) விளையாட்டு
(3) நடனமாடுதல் (4) இசைக்கருவிகள் இசைத்தல்

10. குடும்ப அங்கத்தவர் எதிர்நோக்கும் சவால்
(1) போசனையான உணவு (2) அன்பு, அரவணைப்பு
(3) ஓய்வு குறைவாக இருத்தல் (4) பாதுகாப்பு

11. மனவெழுச்சிப் பண்பாக அமையாதது
(1) விளையாட்டு (2) மகிழ்ச்சி (3) கவலை (4) அன்பு



kalvi.lk

12. குடும்பத்தில் அயலவர்கள் ஒன்று கூடும் சந்தர்ப்பங்களில் ஒன்று
(1) பிள்ளைகளுக்கு உணவூட்டும் போது
(2) கற்றலின் போது
(3) திருமண வைபவங்களின் போது
(4) தொழிலுக்கு வெளியேறும் போது

13. உங்கள் தந்தையின் அண்ணா
(1) சித்தப்பா (2) மாமா (3) மச்சான் (4) பெரியப்பா

14. நற்பிரஜை ஒருவரிடத்தில் காணப்பட வேண்டிய குணவியல்பு
(1) பொறாமை (2) சுயநலன் (3) நேர்மையீனம் (4) பொறுமை

15. திடீரென கோபம் ஏற்படும் போது தோன்றும் நடத்தை வெளிப்பாடு
(1) சிரித்தல் (2) கை,கால் நடுங்குதல் (3) பாடுதல் (4) ஆடுதல்

16. சுட்டுத் துண்டொன்றில் விபரங்களைக் குறிப்பிடுவது
(1) அழகிற்கு (2) பொழுதுபோக்கிற்கு
(3) பொருள்பற்றிய தகவலைப் பெற (4) மேற்கூறிய யாவும்

17. இஸ்லாமிய மதவழிபாட்டுத் தலம்
(1) கோயில் (2) பள்ளிவாசல் (3) விகாரை (4) தேவாலயம்

18. "அன்னை சொற்கேட்க வேண்டும்" எனும் பாடலைத் தந்தவர்
(1) சுப்பிரமணிய பாரதியார் (3) சாரணாகையறும்
(2) சித்தானந்த பாரதியார் (4) வாணிதாசன்

19. உங்களின் தனித்துவ சுய அடையாளத்தை தொடர்புபடுத்துக.
(1) கைரேகை (2) உடற்பருமன்
(3) பெருவிரல் அடையாளம் (4) DNA பரிசோதனை

20. ஒருவரிடம் காணப்படும் பலம்
(1) முன்கோபம் (2) பொறுமையின்மை (3) விடாமுயற்சி (4) பொறாமை

## பகுதி II

➢ **முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாவிற்கும் விடை தருக**

01.
(1) நீா் முதலாம் தவணையில் செய்த கணிப்பீட்டு வகையின் பெயர்களைக் குறிப்பிடுக
(2) கணிப்பீடு செய்த பாட அலகு எது?
(3) கணிப்பீட்டிற்காக தகவல் பெற்ற வழிகள் இரண்டு தருக?
(4) கணிப்பீட்டின் மூலம் பெற்ற நன்மைகள் என்ன?

02.
(1) குடும்பம் என்பதால் கருதப்படுவது யாது?
(2) குடும்பங்களை வகைப்படுத்துக?
(3) கருக்குடும்பம் என்றால் என்ன?
(4) கூட்டுக் குடும்பத்தின் இயல்புகள் 3 தருக?

03.
(1) குடும்பமாக வாழ்வதால் பெற்றுக்கொள்ளக் கூடிய நன்மைகள் 3 தருக
(2) நீங்கள் தனிக் குடும்பமாகவா அல்லது கூட்டுக் குடும்பமாகவா வாழ்வதற்கு விரும்புகின்றீர்கள்? உமது விடைக்கான காரணங்கள் 2 தருக
(3) பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைதல் உமது குறிக்கோள் எனின் அதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நுட்ப முறைகள் எவை?
(4) வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமானவையாக விளங்கும் விடயங்கள் 3 தருக


kalvi.lk

04.

(1) சமூக நன்மைக்குக் காரணமாக அமையும் நிறுவனங்கள் 3 தருக?

(2) ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்வதற்கு மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள் 3 தருக?

(3) விளையாட்டில் ஈடுபடுவதால் ஒருவரிடத்தில் விருத்தியடையும் பண்புகள் எவை?

05.

(1) குடும்ப அலகில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் 3 தருக?

(2) மனிதர்களில் உருவாகும் மனவெழுச்சிகள் 3 தருக?

(3) பின்வரும் மனவெழுச்சி சந்தர்ப்பங்களின் போது வெளிப்படும் நடத்தைகளை குறிப்பிடுக

| மனவெழுச்சி | நடத்தை வெளிப்பாடு |
|---|---|
| மகிழ்ச்சி | |
| கவலை | |
| கோபம் | |

06.

(1) மன வெழுச்சி நிலைகளைக் கட்டுப்படுத்த பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் 3 தருக

(2) நற்பிரஜை ஒருவரிடம் காணப்பட வேண்டிய குணவயல்புகள் 3 தருக

(3) குடும்ப உறுப்பினர்கள் அயலவர்களுடன் நட்புறவை பேணும் சந்தர்ப்பங்கள் 3 தருக

(4) பின்வரும அட்டவணையைப் பூரணப்படுத்துக

| தந்தை வழி உறவினர் | உங்களுக்குள்ள உறவு முறை |
|---|---|
| உங்கள் தந்தையின் :- | |
| தந்தை | |
| அக்கா | |
| தாய் | |



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page